கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 29.07.2024
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், கோயம்புத்தூர் கார்கில் வெற்றி விழா– 2024

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 26.07.2024 அன்று மாலை 4.00 மணி அளவில் முதன்மையர் முனைவர்.பெ.ஐரின் வேதமணி அவர்கள் தலைமையில் கார்கில் வெற்றி விழா கொண்டாடப்பட்டது. முதன்மையர் அவர்கள் தமது தலைமை உரையில் நாட்டைக் காக்க கார்கில் போரின் போது படை வீரர்கள் செய்த தியாகங்களை குறித்து எடுத்துரைத்தார் இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கோயம்புத்தூர் ஐ என் எஸ் அக்ரானி கமாண்டர் எல். இராஜ்குமார் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றி மாணவர்களுடன் கலந்துரையாடி போட்டிகளில் வென்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். அவர் தமது உரையில் கார்கில் போரின் போது இராணுவத்திற்கு உதவியாக கடற்படை ஆற்றிய சேவைகளை எடுத்துரைத்தார் மேலும் மாணவர்கள் பாதுகாப்பு படையில் சேர்ந்து நாட்டை பாதுகாக்கும் பணியில் ஈடுபடவேண்டும் எனவும் பாதுகாப்புப்படையில் உள்ள வேலைவாய்ப்புகள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார் மேலும் மாணவர்கள் நாட்டுப்பற்றை வலியுறுத்தும் பாடல்களையும் சொற்பொழிவினையும் வழங்கினர். தோட்டக்கலை பேராசிரியை முனைவர் அ. சங்கரி அனைவரையும் வரவேற்றார் இந்நிகழ்ச்சியில் இறுதியில் தோட்டக்கலை இணைபேராசிரியர் முனைவர் . மு. பிரபு நன்றியுரை வழங்கினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**